நகல்

குமரன் துணை

விவேகபாநுப் பிரஸ். 19-9-1914,
மதுரை,

கருணாநிதியாகிய சற்குருமூர்த்திகள் திருவடித்
தாமரைகளைத் திரிகரண சுத்தியாக வந்தனஞ் செய்
து வரையும் விண்ணப்பம். நானிதுகாறுங் கட்டளை
யிட்டருளிய பணிகள் செய்து வருகின்றேன்.
கீழே யெழுதும் அடியேனுடைய சந்தேகத்தைக்
கருணை கூர்ந்து, திருவுளத்துட் கொண்டருளி நி
விர்த்தி செய்யப் பலமுறை பிரார்த்திக்கின்றேன்.
சிவஞான சித்தியார் (௨)ம் சூத்திரம் (34)ம் வது
செய்யுளில் பதன்மமோ டதன்மமாகித் தரணிபெயனுந்
தந்து மூலங்காட்டி யென்றதில் மூல மென்றதற்கு முதற்
காரண முண்டென்று உரை விரித்திருக்கிறது. அம்
முதற்காரணம் இன்னதென்று விளங்கவில்லை. கன்மம்
செயப்படு பொருளொன்று உரையால் விளங்குகின்றது.
அதற்கு முதற்காரணம் வேண்டுவது சரியே ஆனாலும்
குடமாகிய செய்யப்படு பொருட்கு மண் முதற்காரண
மானாற்போலக் கன்மமாகிய செயப்படு பொருட்கு
இன்னதுதான் முதற்காரண மென்று விளங்க வேண்
டும். பலரும் பலவாறு இதற்குப் பொருள் கூறுகின்
றார். உண்மை யின்னதென்று சுவாமியவர்கட்கு எழுதினால்
புலப்படுமென்று விண்ணப்பஞ் செய்தேன். பாஷியத்தில்
வரையறுத்து இன்னதுதானென்று கூறப்பட்டிருக்
குமே. கூரிய ஞானமில்லாமையால் அடியேன் போல்வா
ருக்குத் தெளிவாக நன்கு விளங்கவில்லை. நியாயவாயிலா
க இன்னதுதானென்று கட்டளையிட்டருளும்படி
பிரார்த்திக்கின்றேன். அடியேனுக்கும் சுவாமிகளுடை
ய அதிபாலிய நட்பிற்கும் உள்ள சுதந்திரத்தைத் திரு
வுளங் கொண்டருளி யொருவாரத்துள்ளாவது இவ்வி
ஷயத்துக்கும் அடியேன் செய்யும் பணிகளுடைகட்
கும் திருமுகங் கட்டளையிட்டருளப் பிரார்த்திக்கின்றேன்.
௨-ம் சூத்திரம் 9-10-11-ஆம் செய்யுள்களையுந் திருவுளத்துட்
கொண்டருளுக. ௨ம் சூ- 39 உரையால் ஜனக்கன்மம் போலப்
பரிணமித்தன்றிப் பயன்றராமையால் ஜனியபோல மூன்கன்மம்
வேறுவைத் தெண்ணப் படவில்லை யென்றிருக்கிறது. இ
தில் ஜனிய வென்றது எவற்றை? அவற்றை யாவை

நகல்



யென்று கட்டளையிட்டருளுக.

அடியன்,

மு.ரா. அருணாசலக்கவிராயன்,
மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான்,
மதுரை வடக் காவணி மூல வீதி.

இதுவே அடியேன் விலாசமும்.

நகல்

21-22



மதுரை.

மு. ரா அருணாசல கவிராயர்

கடிதம்.

௨ பக்கங்கள்

10.9.1914.

Copied.

த. க. vol B.

P-65 to 67.